ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 2238/19 - 2021 ජූලි මස 29 වැනි බ්‍රහස්පතින්දා - 2021.07.29
2238/19 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு யூலை மாதம் 29 ஆந் திகதி வியாழக்கிழமை
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பு

அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் முறையே 44(1), 45(1) மற்றும் 47 (1) (அ) (ஆ) ஆம் உறுப்புரைகளுக்கமைய, எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைப் பிரயோகித்து, என்னால் 2020, ஒகத்து மாதம் 09 ஆந் திகதிய 2187/27 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலானது, காலத்துக்குக்காலம் திருத்தப்பட்டு, 2021, யூலை மாதம் 27 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு மேலும் திருத்தப்படுகிறது என்பது இத்தால் அறிவிக்கப்படுகிறது.

**கோட்டாபய ராஜபக்ஷ,**
சனாதிபதி.

சனாதிபதி அலுவலகம்,
கொழும்பு 01,
2021, யூலை 27.

1A - G 34726 — 380 (2021/07)
இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

(1) அவ்வறிவித்தலில் இல. "31.0 பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர்" என்ற தலைப்பின் கீழுள்ள "03 அதிவிசேட முன்னுரிமைகள் மற்றும் 04. உரிய தாபன மற்றும் சட்டரீதிச் சட்டகம் தொடர்பில் பின்வருமாறு:-

03 அதிவிசேட முன்னுரிமைகள்

1. பொதுமக்களின் பாதுகாப்பை உறுதிசெய்யும் நோக்கில் இலங்கை பொலிஸ் சேவையின் சேவை நிலையை மேம்படுத்துதல்.

2. சமூகத்தைப் போதைப்பொருள் ஆபத்திலிருந்து விடுவிக்கும் வேலைத்திட்டத்தைச் சமூக மட்டத்தில் போன்று பாடசாலைகள் மற்றும் கல்வி நிறுவனங்களின் பிள்ளைகள், அரச மற்றும் தனியார் வேலைத்தலங்களை இலக்காகக் கொண்ட நிகழ்ச்சித்திட்டங்களை சமயத்தலங்கள், சமூக அமைப்புகள், அரச மற்றும் தனியார் பிரிவுகளினூடாக நடைமுறைப்படுத்துதல்.

3. உள்ளகப் பாதுகாப்பை உறுதிசெய்யும் நோக்கத்துடன் தீவிரவாதம் மற்றும் பயங்கரவாதத்தைத் தடுக்கத் தேவையான நவடிக்கைகளை எடுத்தல்.

4. மக்களின் வாழ்க்கையைப் பாதுகாத்துப் பேணிச்செல்வதற்காக கொள்ளையடித்தல், கொலை செய்தல், சமூக விரோத செயற்பாடுகள் மற்றும் குற்றங்களை ஒழித்தல் மற்றும் தடுத்தல்.

5. நாட்டின் சகல பிரஜைகளுக்கும் விசேடமாக பெண்கள் மற்றும் பிள்ளைகள் சுதந்திரமாக தங்களது வாழ்க்கையை மேற்கொண்டு செல்வதற்கு தேவையான பாதுகாப்பினை எந்நேரமும் பேணுதல்.

6. வாகனப் பாவனையின்போது வீதிகளில் இடம்பெறும் முறைகேடுகளைப் போன்று வீதி விபத்துக்களினால் ஏற்படும் மரணங்கள், உபாதைகள், வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்படுதல் என்பவற்றைத் தடுப்பதற்காக மற்றும் முறையற்ற மற்றும் கவனயீனமான வாகனச் செலுத்துதல்கள், பாதைகள் மற்றும் சமிக்ஞைகளை மீறுதல் போன்று விசேடமாக நகர்புறப் பிரதேசங்களில் முறையற்ற வாகனச் செலுத்துதல்கள் மற்றும் பாதைகள் இருபுறமும் வாகனங்களை நிறுத்தி வைப்பதால் ஏற்படும் வீதி நெரிசல்களைக் குறைத்து முறையாக வாகனங்களை செலுத்தும் ஒழுங்குறுத்துகை முறையொன்று மற்றும் சட்டரீதியான அமைப்பொன்றை நடைமுறைப் படுத்துவதற்காகப் போக்குவரத்துப் பொலிஸ் பிரிவினை மீளத்திருத்தியமைத்து நவீன தொழில்நுட்ப மற்றும் திறமுறைகளைப் பயன்படுத்தி நவீனமயப்படுத்துதல்.

04. உரிய தாபன மற்றும் சட்டரீதிச் சட்டகம்

| திணைக்களங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் | நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்களும் சட்டவிதிகளும் |
|---|---|
| 1. இலங்கை பொலிஸ்<br>2. தேசிய பொலிஸ் பயிற்சி நிறுவனம் | • (1865 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க) பொலிஸ் கட்டளைச் சட்டம்<br>• (2011 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க) தேசிய பொலிஸ் பயிற்சி நிறுவனச் சட்டம் |

(2) அவ்வறிவித்தலில் இல. "1.0 பாதுகாப்பு அமைச்சர்" என்ற தலைப்பின் கீழுள்ள "03 அதிவிசேட முன்னுரிமைகள் மற்றும் 04. உரிய தாபன மற்றும் சட்டரீதிச் சட்டகம் தொடர்பில் பின்வருமாறு:-

03. அதிவிசேட முன்னுரிமைகள்

1. உள்நாட்டுக் கலவரங்கள், பயங்கரவாதச் செயற்பாடுகள் என்பவற்றைத் தடுத்தல் மற்றும் வெளித் தாக்கங்களிலிருந்து பாதுகாத்தல்.

2. கடல் எல்லைகளை மீறிச் செய்யப்படும் சட்டவிரோத பொருள்களை கடத்தல் மற்றும் சேவைகளைத் தடுத்தல்.

3. போதைப்பொருள் இடையூறிலிருந்து விடுபட்டதொரு நாட்டை உருவாக்குவதற்காகப் போதைப்பொருட்கள் இந்நாட்டுக்கு உள்வருவதைத் தடுத்தல், போதைப்பொருள் இடையூறைக் கட்டுப்படுத்தல், போதைப்பொருள் இடையூறுகளுக்குப் பலியாவதைத் தடுத்தல், போதைப்பொருள்கள் இடையூறுகளுக்கு ஆளானவர்களுக்குப் புனர்வாழ்வளித்தலுடன் தொடர்பான சனாதிபதி செயலணியுடன் இணைந்து செயற்படுதல்.

4. கிராமப்புற சமூகங்களின் பாதுகாப்பு மற்றும் நலனுக்காக சிவில் பாதுகாப்புத் துறையை மேம்படுத்துதல்.

5. பல்வித செயற்பாட்டு அபிவிருத்திப் பணிகளுக்காக வறிய குடும்பங்களின் தொழில் மற்றும் வாழ்க்கைத்தரப் பங்களிப்பு அதிகரிக்கும்வண்ணம் வறுமையை ஒழிக்கும் பணிகளைப்போன்று ஏனைய அபிவிருத்தித் துறைகளுக்காகப் பல்வகைச் செயற்பாட்டு அபிவிருத்திச் செயலணியை ஈடுபடுத்துதல்.

**04. உரிய தாபன மற்றும் சட்டரீதிச் சட்டகம்**

| திணைக்களங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் | நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்களும் சட்டவிதிகளும் |
|---|---|
| 1. பாதுகாப்புப் பதவிநிலைத் தலைவரின் அலுவலகம்<br>2. இலங்கைத் தரைப்படை<br>3. இலங்கைக் கடற்படை<br>4. இலங்கை வான்படை<br>5. அரச புலனாய்வுச் சேவை<br>6. இலங்கை கடலோரப் பாதுகாப்புத் திணைக்களம்<br>7. சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகம்<br>8. பாதுகாப்புச் சேவைகள் கட்டளை, பதவிநிலைக் கல்லூரி<br>9. தேசிய பயிலிளவல் சிறப்பணி<br>10. மிலோதா நிறுவனம் (ACADEMY OF FINANCIAL STUDIES) கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகம்<br>11. சிவில் பாதுகாப்புத் திணைக்களம்<br>12. பல்நோக்கு அபிவிருத்திச் செயலணித் திணைக்களம் | • (2009 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க) பாதுகாப்புப் பணியாட்டொகுதியினரின் தலைமையதிகாரிச் சட்டம்<br>• (1949 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க) தரைப்படைச் சட்டம்<br>• (1950 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க) கடற்படைச் சட்டம்<br>• (1949 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க) வான்படைச் சட்டம்<br>• (2009 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க) கரையோரப் பாதுகாப்புத் திணைக்களச் சட்டம்<br>• (1977 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க) புறத்தொப்படைத்தல் சட்டம்<br>• (2008 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க) பாதுகாப்புச் சேவைகள் ஆணை மற்றும் பணியாட்டொகுதிக் கல்லூரிச் சட்டம்<br>• (1956 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க) வெடிபொருட்கள் சட்டம்<br>• (1916 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க) சுடுபடைக்கலன்கள் சட்டம்<br>• (1951 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க) துப்பாக்கிச்சூட்டு வீச்சிடங்கள் மற்றும் இராணுவப் பயிற்சிச் சட்டம்<br>• (1985 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க) பயன்பாடுகள் மற்றும் குறைநிரப்புச் சட்டம்<br>• (1966 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க) தீங்குவிளைவிக்கும் ஆயுதங்கள் சட்டம்<br>• (2001 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க) கடற்கொள்ளைச் சட்டம்<br>• (1979 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க) பயங்கரவாதத் தடுப்புச் சட்டம்<br>• (1947 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க) பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டம்<br>• (1981 ஆம் ஆண்டின் 68 ஆம் இலக்க) சேர் ஜோன் கொத்தலாவல அரச பாதுகாப்பு பயிற்சிக் கல்லூரிச் சட்டம்<br>• (1999 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க) பயங்கரவாதிகளின் குண்டுத் தாக்குதல்களை அடக்குதல் சட்டம்<br>• (2000 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க) கடல்சார் கடற்செலவின் பாதுகாப்புக்கெதிரான சட்டமுறையற்ற செயல்களை அடக்குதல் சட்டம் |

08-111

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.